

"சுருக்கம் எழுதுதல்"

ஒரு விடயத்தை / ஒரு பந்தியை அதன் கருத்து சிறிதும் குன்றாமல் குறைந்த சொற்களில் திரட்டி எழுதுவது சுருக்கம் எனப்படும். கொடுக்கப்பட்ட பந்தியை நன்றாக வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும். விளக்கமற்றதாகவும் மயக்கமாகவும் உள்ள பகுதிகளைத் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். பந்தியை நன்றாக வாசித்த பின்னர் இப்பந்தி எதைப் பற்றியது என்பதை வரையறை செய்துகொள்ளவேண்டும்.

பின்னர் பந்தியின் மையக்கருத்தையும் துணைக்கருத்துக்களையும் தெரிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட கருத்துக்களை சிறுகுறிப்பு முறையில் குறித்துக்கொண்ட பின்னர் மாதிரிச் சுருக்கம் ஒன்றை எழுத வேண்டும். பின்னர் மூலப் பகுதியுடன் ஒப்பிட்டு திருத்தங்களோ மாற்றங்களோ செய்யலாம். சுருக்கம் எழுதும்போது சுற்றிவளைத்து எழுதவோ, மேலதிக நடையைப் பயன்படுத்தவோ, மூலப் பகுதியிலுள்ள உவமை முதலிய அணிகளைத் திருப்பி எழுதவோ சுருக்கம் இடம் கொடுக்காது.

சுருக்கம் எளிமையாகவும் தெளிவாகவும் வழுவில்லா மலும் அமைதல் வேண்டும். சுருக்கத்தில் தவிர்க்கப்பட வேண்டியவை சுருக்கத்திற்கு தரப்படும் பந்திகளிலே வரும் உதாரணங்கள், எடுத்துக்காட்டுக்கள் கருத்தை விளக்க வருவனவேயன்றி அவை கருத்துக்களாக அமைவதில்லை. மூலப்பகுதியில் விரிவாக விளக்கப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள கருத்தினை மாத்திரம் கூறல் வேண்டும். மூலப்பகுதியிலே அமைந்துள்ள வர்ணனை பகுதிகள் நீக்கப்பட வேண்டும். உவமானங்கள் விளக்கப்படும் பகுதிகளில் பொருளுக்கே முக்கியத்துவம் உண்டு. அதனால் சுருக்கத்தில் உவமானங்கள் தவிர்க்கப்படும். சில உரைப்பகுதியிலே கூறப்பட்ட கருத்து வெவ்வேறு வாக்கியங்களால் மீண்டும் கூறப்படுதல் உண்டு. கூறியது கூறல் குற்றமாகும்.

❖ சுருக்கம் எழுதும் போது கவனிக்க வேண்டியவை

1. சுருக்கம் சொந்த வசன நடையிலே எழுதப்படும்.
2. உதாரணங்கள். உவமானங்கள். மேற்கோள்கள். வருணனை. அடைமொழிகள் என்பவைகளை முற்றாக நீக்கிவிடுதல்.
3. கொடுக்கப்பட்ட மூலப்பகுதியில் எத்தனை பந்திகள் இருப்பினும் ஒரு பந்தியிலே சுருக்கத்தை எழுதி முடித்தல்.
4. தற் கூற்று வாக்கியங்களைப் பிறர் கூற்று வாக்கியங்களாக எழுதுதல்.
5. மூலப் பகுதியில் சொல்லப்பட்டாத விடயங்களையும். சொந்த கருத்துக்களையும் எழுதுவதைத் தவிர்த்தல்.
6. ஒழுங்குபடுத்தல்: குறித்துக் கொண்ட அம்சங்களில் மிகப் பிரதானமானவற்றை முறைப்படி ஒழுங்குபடுத்திக் கொள்ளல்.
7. பருமட்டான சுருக்கம் எழுதுதல்: ஒழுங்குபடுத்திய அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு, சொந்த மொழி நடையில் பிழையின்றிப் பொருட்செறிவுடன், சுருக்கமாக எழுதுதல்.
8. ஒப்பு நோக்கல்: பருமட்டாக எழுதப்பட்ட சுருக்கத்தில் முக்கிய அம்சங்கள் குறிக்கப்படாதிருப்பின் அவற்றையும் சேர்த்துக் கொள்ளல்.
9. திருத்தமாக எழுதுதல்: திருத்தப்பட்ட பரும்படியான சுருக்கத்தை மீண்டும் ஒரு முறை வாசித்துப் பார்த்த பின் குறியீடுகளை அனுசரித்தும் சொல் எண்ணிக்கையைக் கருத்திற் கொண்டு இலகு மொழி நடையில் எழுதுதல்.

10. மூலப் பகுதியில் தன்மை முன்னிலை சொற்கள் இடம் பெற்றிருப்பினும் சுருக்கம் படர்க்கையில் மட்டுமே எழுதப்படுதல்.

11. செய்யுள் இடம் பெற்றால் அதன் பொழிப்பைச் சுருக்கி வசன நடையில் எழுதுதல்.

12. உரைப்பகுதியில் அமைந்துள்ள வினா வாக்கியம் கூற்று வாக்கியங்கள் அமைதல் வேண்டும்.

13. நீண்ட வாக்கியங்கள் அமையின் அவற்றிற்குப் பொருத்தமான சொற்றொடர்கள் அல்லது சொற்கள் பயன்படுத்தல் வேண்டும்.

❖ சுருக்கத்தின் பயன்பாடு

இன்று மனிதனின் அன்றாட வாழ்வில் மிக மிக அவசியமாகின்றது, சுருக்கமாகச் சொன்னாலும் கேட்போருக்கு விளங்கும் வண்ணம் அமைதல் வேண்டும்.

1. அறிஞர் பலரால் நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகளோ, ஏனைய விடயங்களோ அப்படியே பத்திரிகையில் வெளியிட முடியாது. அதனால் பத்திரிகைகளில் சொற்பொழிவுகளின் சுருக்கத்தையே பத்திரிகையாளர் வெளியிடுகின்றனர். எனவே பத்திரிகைத்துறைக்குச் சுருக்கம் பயன்படுகிறது.
2. கல்வியற்கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும், ஏனைய கல்வி நிறுவனங்களிலும் நிகழ்த்தப்படும் விரிவுரைகளின் முக்கிய அம்சங்களை குறிப்பெடுத்துக் கொள்கின்றனர். அதற்கும் சுருக்கம் பயன்படுகிறது.
3. புத்தகங்கள், வாசிப்பவர்கள் அவற்றில் உள்ள முக்கிய அம்சங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்வதற்கு சுருக்கம் எழுதும் பயிற்சி உதவுகிறது.
4. சொற்பொழிவின் முடிவிலும். கட்டுரையின் முடிவிலும் ஒருவர் விளக்கிய கருத்துக்களைத் திரட்டிக் கூறுவதற்குச் சுருக்கம் பயன்படுகிறது.
5. சுற்று நிருபங்கள், அறிக்கைகள். வானொலிச் செய்திகள் ஆகியவைகளைக் குறித்த அளவில் அடக்கக் கூடியதாகத் தயாரிப்பதற்கு சுருக்கமெழுதும் பயிற்சி இன்றியமையாததாகக் கருதப்படுகின்றது.

பொதுவாகச் அவதானிக்கும் தன்மை வளரும். மேலும் ஓர் உரையில் முக்கிய கருத்து எதுவெனவும் முக்கியமற்றது எதுவாகவும் பகுத்துக் காணும் திறமை அதிகரிக்கும். அதனால் சுருக்கம் சம்பந்தமாக மேற்குறிப்பிட்ட விடயங்களை மாணவர் கருத்திற்கொண்டு சுருக்கம் எழுதும் பயிற்சியிலும் ஒரு விடயத்தை சுருக்கிக் கூறும் பயிற்சியிலும் ஈடுபடுதல் வேண்டும். கருத்தூன்றி சுருக்கமெழுதும் பயிற்சியினால்

❖ சுருக்கம் எழுதுதல் - மாதிரிப் பயிற்சி

1. அவன் இன்று கொழும்புக்கு வந்தால், கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே உதிக்கும்.

சுருக்கம்: அவன் இன்று கொழும்புக்கு வரமாட்டான்.

2. சோதிடன் செல்வந்தனை நோக்கி "உனக்கு நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என்னும் ஐம்பொருட்களுள் ஏதாவது ஒன்றினால் பேராபத்தொன்று ஏற்படலாம்" எனக் கூறினார்.

சுருக்கம்: ஐம்பூதங்களுள் ஒன்றால் செல்வந்தனுக்கு ஆபத்து ஏற்படலாம் எனச் சோதிடன் கூறினார்.

3. "கற்றதனா லாய பயனென் கொல் வாலறிவன்
நற்றாள் தொழாரனின்"

சுருக்கம்: கற்றதன் பயன் இறைவனைத் தொழுதலாகும்.

4. சூரியனின் உதயம், வைகறையின் தோற்றம். மாலையின் பிறப்பு, ஞாயிற்றின் மறைவு, மழை வீழ்ச்சி, இடிமுழக்கம், மின்னல் ஆகிய இயற்கை நிகழ்ச்சிகளை ஆதி மனிதன் கண்டு கற்பனை செய்தான். அவ்வியற்கை நிகழ்ச்சியை விளக்க அவன் கட்டுக்கதைகளை ஆக்கினான்.

சுருக்கம்: ஆதி மனிதன் இயற்கை நிகழ்ச்சிகளை விளக்கிக் கட்டுக்கதைகள் ஆக்கினான்.

5. ''மற்றவர்கள் என்ன இடையூறு செய்தாலும் சரி என் கணவனுக்காக என் வாழ்க்கையைத் தியாகம் செய்வேன்'' என்று வாழும் சிறந்த மனைவியைப் போல 'மற்றவர்கள் எங்கள் வாழ்க்கையைக் கெடுக்க எவ்வளவு முயன்றாலும் சரி என் மனைவிக்காக என் வாழ்க்கையைத் தியாகம் செய்வேன்' என்று வாழும் உயர்ந்த கணவனைப் போல. காந்தி சமய நெறிக்காகத் தம் வாழ்க்கையைத் தியாகம் செய்தார்.

சுருக்கம்: குடும்பத்தில் கணவருக்காக மனைவிக்காக கணவனும் தியாகஞ் செய்வதுண்டு அவ்வாறே மகாத்மா காந்தி சமய நெறிக்காகத் தம் வாழ்க்கையைத் தியாகம் செய்தார்.

6. அந்தப் படகு கவிழ்ந்ததால் எல்லோருமே இறந்தனர். ஒருவர் கூட நீந்திக் கரையேறவில்லை. என்ன பரிதாபம். சுழியோடிகள் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் பல மணித்தியாலயங்கள் தேடியும் உடம்புகள் மாத்திரமே அகப்பட்டன.

சுருக்கம்: அந்தப்படகு விபத்தில் எல்லோருமே இறந்தனர்.

7. பசு சாந்தமான மிருகம். அதை எல்லோரும் விரும்புவார். அதன் மூலம் கிடைக்கும் பயன்களோ அதிகம். அதனால் கிராமப்புற மக்கள் பசுவை விரும்பி வளர்த்தும் பல பயன்களையும் பெற்று வருகின்றனர்.

சுருக்கம்: பசுவை அதன் பயன் கருதி கிராமப் புற மக்கள் விரும்பி வளர்க்கின்றனர்.

01. கீழே தரப்பட்டுள்ள அ.ஆ...ழ என்னும் உரைப் பகுதிகள் ஒவ்வொன்றினதும் சுருக்கத்தை 15 - 20 சொற்களில் அமையக் கூடியவாறு வேறுவேறாக எழுதுக (சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக.)

அ) தேனீக்கள் மலர்களிலிருந்து தேனைச் சேகரிப்பது போல மாணவரும் நூல்களிலிருந்து அறிவைச் சேகரித்தல் வேண்டும். மாணவர் அறிவைச் சேகரிப்பதற்கு மிகவும் வாய்ப்பான இடம் நூலகமேயாகும். நூலகத்தில் மாணவர் இன்பப் பொழுது போக்கிற்காகவும் வாசிக்கலாம். ஆராய்ச்சி செய்வதற்காகவும் வாசிக்கலாம். பெரும்பாலான பாடசாலைகளில் சிறிய அளவிலாயினும் நூலகங்கள் உள்ளன. சில பாடசாலைகளில் எல்லா வசதிகளுமுடைய நல்ல நூலகங்களும் உள்ளன. மாணவர் தமது வகுப்பறையிற் இயலுமான அளவு விரிவாக்கி வளப்படுத்துவதற்கு இத்தகைய நூலகங்களை இயலுமான அளவு பயன்படுத்த வேண்டும்.

ஆ) இரயில் பாதையில் ஒரு பக்கத்தில் மனிதர்கள் அடிக்கடி நடந்து சென்றதனால் ஏற்பட்ட ஒற்றையடிப் பாதையில் ஒரு மனிதன் அந்த நள்ளிரவு வேளையில் நடந்து கொண்டிருந்தான். பாதையைக் கண்ணால் பார்த்துக் கொண்டு நடக்கவில்லை. காலின் உணர்ச்சி கொண்டே நடந்தான் இரயில் தண்டவாளத்தின் ஓரமாகக் குவிந்திருந்த கருங்கல் சல்லிகளில் அவனுடைய கால்கள் சில சமயம் தடுக்கின. ஒன்றையடிப் பாதையின் மற்றொரு பக்கத்தில் வேலியைப் போல் வளர்ந்திருந்த கற்றாழைச் செடிகளின் முட்கள் சில சமயம் அவனுடைய கால்களில் குத்தின. அவற்றைப் பொருட்படுத்தாமல் விரைவாக நடந்தான்.

(இ) அன்பென்றால் என்ன? அது பல வர்ணமுள்ள வானவில்லுப் போன்றது வாழ்வென்னும் இருண்ட முகிற் கூட்டங்களை ஒளியில் தேய வைப்பது மக்களுக்கு மகிழ்ச்சியை வாரிவாரி இறைப்பது நித்திரையில் ஆழ்ந்திருக்கும் குழந்தையைப் பாருங்கள். அங்கே தொட்டிலை ஆட்டிக்கொண்டு நிற்கும் தாயின் உள்ளத்தில் உதிப்பது என்ன? இந்த அன்பு தான். சுடுகாட்டிலும் ஆதரவாகக் கூடி நிற்போர் உள்ளத்தில் மிளிர்வது என்ன? இதே அன்பு தான். எம்மைப் போன்று சாதாரண மக்களை அரசகுமாரர் ஆக்குவது அன்பென்னும் மந்திரவித்தை அன்றோ? பெரிய வெற்றி வீரனின் அருஞ் செயல்களுக்கு ஆதாரமாயிருப்பது அன்பன்றோ?

02. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சாராம்சத்தை 40 - 45 சொற்களில் அமையக்கூடியவாறு சுருக்கி எழுதுக.

மொழி கற்கும் பணியில் மாணவர்களுக்கு கல்வி புகட்டும் கருவியாக உடனுழைக்கும் நண்பனாக உறுதுணை புரியும் ஒரு வசதிப் பொருளாகக் கணினி இயக்குகின்றது. 'சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாற்பழக்கம் வைத்தொரு கல்வி மனப்பழக்கம்' என்று பாடினார் ஔவையார். மொழி அமைப்பின் கூறு ஒன்றினை மாணவனுக்கு அறிமுகப்படுத்திப் பின்னர் அக்கூறு பற்றி அவன் நன்கு விளங்கிக் கொள்ளவும் அதனைப் பயன்படுத்திக் கையாளும் ஆற்றலைப் பெறவும் மொழிப்பயிற்சி என்பது தேவைப்படுகின்றது. இந்நோக்கங்களை நிறைவேற்றும் குறிக்கோளுடன் பயிற்சி வினாக்கள் அமைக்கப்படுகின்றன. இவ்வினாக்களுக்கு விடையளிக்க தயாரித்துக் கணினி வழிக்கல்விகளை கொடுக்கலாம் இவற்றை நோக்கிய மாணவன் இவற்றிற்கேற்ப விடையளிக்கிறான். உடனே மாணவன் தன் விடைகள் சரியா? தவறா? எனக் கணினி வழி அறிகிறான். சரி என்றால் பாராட்டையும் தவறு செய்வதால் திரும்பச் செய்வதற்குரிய தூண்டு தலையும் அவன் கணணி வழிபெறுகிறான். திரும்பத் திரும்பத் தவறு செய்வதால் சரியான விடையையும் அவன் விரும்பினால் கணினியில் பெறமுயும், இவ்வாறு மொழிகற்கும் மாணவனுக்கு மொழிப் பயிற்சி நல்கும் ஒரு தனிப்பட்ட ஆசிரியனாக அதாவது கல்வி புகட்டும் கருவியாகக் கணினி திகழ்கின்றது

சுருக்கத்தில் உள்ளடக்கப்பட வேண்டிகருத்துக்கள்

- ✓ மொழி கற்கும் பணியில் கணினி முக்கிய இடம் பெறுகின்றது.
- ✓ மொழிக் கூற்று பற்றிய அறிவுக்கும் அதனைக் கையாளும் ஆற்றலுக்கும் மொழிப்பயிற்சி அவசியம்.
- ✓ மொழிற்பயிற்சியைக் கணணியினூடாக வழங்கலாம்.
- ✓ கணணிவழிக் கல்வியினூகக் கற்றலுக்கு மாணவர்கள் தூண்டப்படுகின்றனர்.
- ✓ எனவே கல்வி புகட்டும் ஆசானாக கணினி விளங்குகின்றது.

03. கீழே தரப்பட்டள்ள உரைப்பருதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)

கல்வி பயிலும் பருவம் இளமைப் பருவம் என்று சொல்லப்படுகின்றது. கலைகள் பயிலுவதற்கு இளமைப்பருவமே சாலச் சிறந்தது. அதனாலே தான் "இளமையிற் கல்" என்னும் ஆணைபிறந்தது. மானுடராய்ப் பிறந்தவர் எல்லாருக்கும் இது பொதுவான நெறி, இதன்படி ஒழுக அதன் மீது பதிப்பிக்கப்படும் உயர்ந்த எண்ணக்கருக்களும் சீரிய இயல்புகளும் என்றைக்கும் மாறா மாணவர்களுக்கு தொழிற்கல்வி இன்றியமையாதது என்ற இக்காலத்தில் உலககெங்கும் உள்ள அறிஞர்கள் வற்புறுத்தி வருகின்றனர். இந்தியாவும் இந்த இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறது உடல் உழைப்பை ஒட்டிய தொழில் ஆடவர் மகளிர் ஆகிய இருபாலருக்கும் வேண்டப்படுவது என்பதும் அப்பயிற்சி இளம் பிராயத்திலேயே அளிக்கப்பட வேண்டும் என்பது பலர் கருத்து. ஆனால் நம்

நாட்டில் முன்பு ஒரு காலத்தில் இருந்த இதை விட முக்கியமான பயிற்சி ஒன்றை மறந்துவிடலாகாது. அக்காலத்தை விட பெரிதும் வேண்டப்பட்டுகிறது. மானுட வாழ்க்கையானது பரஸ்பர உதவியை அடிப்படையாகக் கொண்டது என்னும் கோட்பாடு இந் நாளில் அறவே மறந்து போய்விட்டது. எங்கும் ஒரே போட்டி மயம் போர்க்களத்தின் காட்சியே யாண்டும் தென்படுகிறது. பகுத்தளித்தல் என்னும் பண்புக்குப் பதிலாகப் பறித்துப் பிடுங்குதல் என்னும் பாதகமே பார்க்கும் இடமெங்கும் காட்சி கொடுக்கிறது. நவீன படிப்பு முறையே இத்தகைய துல்லிய நோக்கத்துடன் அமைக்கப்பட்டிருக்கிறது. கல்வியானது கைங்கரியமாய் இருந்து போய் இப்போது போட்டிமயமாய் மாறியிருக்கிறது. என்னென்ன முறைகளில் பிறரை விடத் தாம் மேலான அந்தஸ்து வைக்க முடியும் என்பதுவே இக்காலத்தவர் பெறும் பயிற்சியாகும். துவேஷமும் துயரமும் அதிகரிப்பது இதனாலேயேயாம்.

சுருக்கத்தில் உள்ளடக்கப்பட வேண்டிகருத்துக்கள்

- ✓ உயர்ந்த எண்ணங்கள் ஆழப் பதியக் கூடிய இளமைப்பருவமே கல்வியும் கலையும் பயில்வதற்குச் சிறந்தது.
- ✓ இளமையிலேயே இருபாலருக்கும் தொழிற்கல்வி அவசியமானது, ஆனால் இதைவிட முக்கியமானது பரஸ்பர உதவியை அடிப்படையாகக் கொண்ட கல்வியாகும். இது முற்காலத்தில் இருக்கின்றது, இதனால் மறைக்கப்பட்டுள்ளது.
- ✓ கல்வி உட்பட்ட அனைத்தும் போட்டிமயமாகிவிட்டது இன்று மறுக்கப்பட்டுள்ளது.
- ✓ எனவே இன்று வேண்டப்படுவது பரஸ்பர உதவியைப் போற்றும் கல்விப் பயிற்சி.

பயிற்சி வினாக்கள்.

01. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் சுருக்கி எழுதுக.

மொழிபெயர்ப்பில் இரண்டு பிரதான பிரச்சினைகள் உள்ளன. ஒன்று கலைச்சொல்லாக்கம், மற்றது பிறமொழிப் பெயர்களைத் தமிழில் எழுதுவதில் உள்ள சிக்கல். முதலாவது சொற்தொகுதி வளர்ச்சி பற்றிய பிரச்சினை. இரண்டாவது ஒலியமைப்பைப் பேணுவது சந்பந்தமான பிரச்சினை. இவை இரண்டும் மொழி வளர்ச்சியோடு சம்பந்தப்பட்ட முக்கிய பிரச்சினைகளாகும். இவ்விரு அம்சங்கள் பற்றியும் பாரதியிடம் திடமான சில கருத்துக்கள் இருந்தன.

கலைச்சொல்லாக்கம் பற்றிய பிரச்சினை மொழி பெயர்ப்போடு மட்டும் சம்பந்தமுடையதல்ல. நவீன அறிவுத்துறைகள் பற்றித் தமிழில் சுயமாக எழுதுவதில் கூட இது ஒரு முக்கிய பிரச்சினையாகும். பாரதி இப்பிரச்சினையை எவ்வாறு எதிர்நோக்கினான்? அதற்கு அவன் கண்ட தீர்வு யாது? என்பவற்றை அறிவது பயனுடையது. கலைச்சொல்லாக்கத்தின் அவசியத்தைப் பாரதி நன்கு உணர்ந்திருந்தான். பாரதி காலத்திலே இது பற்றிய ஆரம்பம் தமிழ் நாட்டில் வேறு பல அறிஞர் மத்தியிலும் ஏற்பட்டிருந்தது. ராஜாஜி, வேங்கட சுப்பையர் ஆகியோர் கலைச் சொல்லாக்கம் தொடர்பாக ஒரு மாதப்பத்திரிகை கூட நடத்தி இருக்கிறார்கள். கலைச் சொல்லாக்கத்தின் அவசியம் பற்றியும், அவர்களது பத்திரிகை முயற்சி பற்றியும் தமிழில் சாஸ்த்ர பரிபாஷை என்ற சிறு கட்டுரையில் பாரதி குறிப்பிட்டுள்ளான். விஞ்ஞான அல்லது அறிவியல் கலைச் சொல்லையே இங்கு பாரதி சாஸ்த்ர பரிபாஷை என்று குறிப்பிடுகிறான்.

02. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக (சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக)

இஸ்லாமிய கிரேக்க, உரோம நாகரிகம் முதலியவற்றையும் நுகர்ந்து அனுபவித்து, இன்றைய மேனாட்டு நாகரிக வளர்ச்சிக்கும் காலாக விளங்கினர். இக்கால மானிட முன்னேற்றத்திற்கு மத்திய வரலாற்று மக்களில், இஸ்லாமிய மக்களைப் போல் வேறெந்த இனமும் துணை செய்யவில்லை.

மேலும், அவர்கள் மொழியே இடைக்காலத்தில் பல நூற்றாண்டுகளாக அறிவுத் துறையிலும் பண்பாட்டிலும் சிந்தனை உலகிலும் சிறந்த மொழியாக நிலவி வந்தது. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து நான்கு நூற்றாண்டுகள் வரை சமயம், வரலாறு, வைத்தியம், பூகோளம், வனநூல் தொடர்பான ஆராய்ச்சிகளும் நூல்களும் அரபு மொழியில் ஆக்கப்பட்டன.

இஸ்லாமிய கலைகளையும் பண்பாட்டினையும் உலகிற்கு அளித்தனர். அவர்கள் இயற்கையாகவே கலை உணர்வு மிக்கவர்கள், பிறருடைய சிறந்த கலை அம்சங்களை ஏற்றுக்கொள்ளும் பரந்த மனப்பாண்மை உடையவர்கள். அவர்கள் கட்டிடங்களில் பல கலை முறைகளின் சாயலைக் காணலாம். எனினும், பல நூற்றாண்டுகளில் இஸ்லாமியக் கட்டிடக்கலை ஒரு தனிப்பண்பைப் பெற்றுள்ளது. பலவகைப்பட்ட கட்டிடக்கலை முறைகளை ஒன்றுபடுத்தி, அதற்கொரு தனிப் பண்பை அளித்தது இஸ்லாம் மதமே.

03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக.)

கவிதையைப் படித்து அனுபவிக்க விரும்புவோர் மொழியறிவு உடையராதல் வேண்டும். அதாவது, சொல்லின் ஆற்றலை ஓரளவிற்காயினும் அவர்கள் அறிந்து கொள்ளுதல் வேண்டும். சொல்லுக்கு ஒலிவடிவு, வரிவடிவு என இருவகை வடிவுகள் உண்டு. கவிதையைப் படிக்கும்பொழுது வரி வடிவத்தைக் கண்ணாற் பார்க்கிறோம். அதே நேரத்தில் அதன் ஒலிவடிவத்தைக் காதாற் கேட்கின்றோம். சொல்லின் ஒலி வடிவம், அச்சொல் குறிக்கும் பொருள் என்பவற்றைப் புலவன் நன்கு அறிந்தவனாதலின், அவற்றைத் தனக்கு வேண்டியவாறு கவிதையில் பயன்படுத்திக்கொள்ளுகின்றான். நாம் அவற்றைச் சிறிதளவாயினும் அறிந்திராவிடின், கவிதை குறிப்பனவற்றைப் பூரணமாகப் பெற்றுக்கொள்ள முடியாது.

இனி, மொழியின் ஒலிப்பண்பு கவிதையிற் பயன்படுத்தப்படுமாற்றைச் சிறிதுநோக்குவோம். கவிதை இயற்றும் புலவன் கைக்கொள்ளும் கருவிகளுள் மிக முக்கியமானது ஒலி. ஒலிகள் ஒன்றுகூடி ஒரு முறைப்பட்டுச் செல்லும் போது அது ஓசை என்ற பெயரைப் பெறுகின்றது. அது ஒரு நியதிப்பட்டுச் செல்லும்போது பா எனப்படுகின்றது. பாட்டில் ஓர் ஒலி திரும்பத் திரும்ப வருதலை மோனை என்றும் எதுகை என்றும் கூறுகின்றோம். ஓர் அளவுபட்ட ஒலித்தொடர் சிற்சில வேறுபாடுகளுடன் நீர்த்தரங்கம் போலத் திரும்பத் திரும்ப வரும்போது, அதனை நாம் ஒத்திசை என்கின்றோம். அது பாட்டிலும் உண்டு, உரைநடையிலும் உண்டு. ஒலி திரும்பத் திரும்ப வருதலுக்கும் உணர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

04. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)

உள்ளத்தின் நன்றியறிதலைப் படம் பிடித்துக் காட்டுவது அவ்வளவு எளிதான காரியமல்ல. ஒருவர் செய்த உதவிக்கு நன்றி தெரிவிப்பது என்பது இன்றைய நாகரீகத்தில் ஒரு வெறும் ஆச்சாரமாகவும் சடங்காகவும் ஆகிவிட்டிருக்கிறது. இருப்பினும், உளமார உள்ளத்தினுள்ளே தாம் பெற்ற இன்பத்திற்காகத் தத்தம் நன்றியறிதலைத் தெரிவிப்போர் இன்றும் இருக்கவே செய்கின்றனர். உயிருக்கே ஆபத்தாக நிற்கும் நோயினின்றும் குணப்பட்டு விட்டால் மருத்துவருக்கு நன்றி தெரிவிப்போர் இருக்கின்றனர். அனுதாபம் தெரிவித்த உறிவினருக்கும் அன்பருக்கும் நன்றி தெரிவிப்போர் இருக்கின்றனர். வீடு, மனை, சொத்து, சுகம் எதிர்பாராத வகையில் கிடைத்துவிட்டால் நன்றி தெரிவிப்போர் இருக்கின்றனர். குழந்தை பெற்றுவிட்டால் நன்றி, உத்தியோகம் கிடைத்து விட்டால் நன்றி என்று தெரிவிப்போரும் இருக்கின்றனர். மனிதன் செய்த உதவிக்கு மனிதன் நன்றி

தெரிவிக்கிறான். விலங்கினங்களுக்கும் உயிரினங்களுக்கும் இயற்கைக்கும் அதன் சக்திகளுக்கும் கூட கடப்பாடுடையவர்களாகக் கருதிக்கொண்டு அவற்றுக்கெல்லாம் நன்றி தெரிவிப்போரும் இருக்கின்றனர். காலத்தால் செய்த உதவிக்கு பயன் - கருதாது செய்த சேவைக்கு சொல்லாமல் செய்த உபகாரத்திற்கு என்றெல்லாம் நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம்.

05. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)

சி. வை. தாமோதரம்பிள்ளை பல பாட்டுக்களையும் உரைநடை நூல்களையும் இயற்றியுள்ளார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதன்முதலில் பி. ஏ. பட்டம் பெற்றுச் சிறப்பாகத் தேறிய அவர், ஆங்கிலத்தில் பெற்றிருந்த புலமையும் ஆராய்ச்சி அறிவையும் தமிழிலக்கிய வளர்ச்சிக்கு நல்ல முறையில் பயன்படுத்தினார். அவருடைய பாடல்களும் உரைநடையும் பழைய முறையில் சொற்செறிவும் பொருட்செறிவும் உடையன. இன்று அவர் இயற்றிய நூல்கள் மறக்கப்பட்ட போதிலும் பனையோலையில் இருந்த பழைய தமிழ் ஏடுகள் சிலவற்றைப் பெரு முயற்சியுடன் படித்து முதன்முதலாக அச்சிட்டு வெளியிட்ட அவருடைய அரிய தொண்டு மறுக்கப்படவில்லை. நீதிபதி அளவிற்கு உயர்பதவி பெற்று விளங்கிய அவர், அக்காலத்தில் தமிழ்த் தொண்டைப் பெருமையாகக் கருதினார். உதயதாரகை என்ற பத்திரிகைக்கும் ஆசிரியராக இருந்து தொண்டு புரிந்தார். பனையோலை ஏடுகளை புறக்கணித்தால் பழைய நூல்கள் அழிந்து விடுமே என்று பெருங்கவலை கொண்டு முதல் குரல் எழுப்பிப் பல தமிழ் நூல்களைக் காப்பாற்றியவர் அவர்.

06. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக.

இன்றைய காலகட்டத்தில் தொடர்பாடல் என்பது மிகப் பிரபல்யமானதும் அவசியமானதுமான ஒரு செயற்பாடாகி விட்டது. இன்று முழு உலகுமே ஒரு கிராமம் என்ற வகையில் சுருங்கிவிட்டமைக்கும், நெருங்கிவிட்டமைக்கும் இத்தொடர்பாடல்விருத்தியே அடிப்படைக் காரணமாகி விட்டது எனலாம்.

பழமைமிக்க தொடர்பாடல் முறையான கடிதம் முதல் தொலைபேசி, தொலைநகல் (பக்ஸ்) தொலைப்பதிவு (டெலக்ஸ்) இலத்திரனியல் தபால் (ஈமெயில்) போன்ற பல்வேறு ஊடகங்களும் அகில உலகத்தையுமே ஆட்டிப் படைக்கின்றன. மேற்கூறப்பட்ட பல்வேறு வகையான சாதனங்கள் தோற்றம் பெற்று விட்ட போதும் மனிதப் பண்பும் நேயமும் மிக்க நேரடித் தொடர்பானது எல்லாவற்றிலும் மேலானது என்று கூறலாம். உயர்ந்த அறிவும் ஆற்றலும் விஞ்ஞானத்தில் வியத்தகு சாதனைப் போக்கும் மிக்க மனிதன் தனது நாளாந்த தொடர்பாடலை பண்புடனும் சிறப்புடனும் மேற்கொண்டு ஊடாடும் உறவாடும் தன்மைகளைத் தன்னுள் வளர்த்துக் கொள்ளல் மிக அவசியமாகும்.

எமது நாளாந்த வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு சந்தர்ப்பங்களின் போதும் தேவைகளின் போதும் நாம் பல்வேறு வகைப்பட்டவர்களுடன் தொடர்புகொள்ளவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. அத்தகைய தொடர்பாடலானது பல்வேறு மட்டங்களில் இடம்பெறக் கூடும். வயதில் கூடியோருடனோ குறைந்தோருடனோ சமவயது உடையோருடனோவாகவும் இருக்கலாம். நம்மைவிட அறிவிலும் ஆற்றலிலும் கல்வியிலும் செல்வத்திலும் சிறப்புப் பெற்றவர்களுடனாகவும் இருக்கலாம். நமது நாட்டவர்களுடன் மட்டுமன்றி வேறு நாட்டவர்களுடனாகவும் இருக்கலாம். இவ்வாறு பல்வேறு வகைப்பட்டவர்களுடனும் நாம் தொடர்பாடல் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் நிகழ்காலத்தில் மட்டுமன்றி வருங்காலத்திலும் ஏற்படலாம். இதற்கு இசைவாக நாம் தொடர்பாடலைத் திறன்பட மேற்கொள்ளும் ஆற்றல், பண்பு என்பவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக நாம் நீதிமன்றத்திற்கு செல்லும் சந்தர்ப்பத்தை எடுத்துக் கொள்வோம். அவ்விடத்தில் நாம் பின்பற்ற

வேண்டிய நடைமுறைகளைப் பின்பற்றி பண்புடன் நடந்து கொள்ளவில்லையெனின் கண்டிப்புக்கும் தண்டனைக்கும் ஆளாக நேரிடலாம்.

07. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

எது நல்ல சினிமா? நல்ல சினிமாவக்குச் சில அடிப்படை அளவுகோல்கள் உள்ளன. இவற்றைத் தெரிந்து கொண்டால்தான் தரமான படங்களை அடையாளம் கண்டுகொள்ளமுடியும். இலக்கியத்தைப் போலவே சினிமா அனுபவமும் எமக்கு ஆழமாவதற்கு நல்ல சினிமா என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்வது அவசியமாகின்றது. அச்சில் வருவதெல்லாம் இலக்கியம் ஆகாதது போலவே திரையில் வருவதெல்லாம் சினிமா என்று கொள்ள முடியாது.

சினிமா, திரைப்படமாக்கப்பட்ட நாடகம் அல்ல இது ஒரு அடிப்படையான வித்தியாசம். நிகழ்ச்சி ஒன்றை அவையோரின் முன் நிகழ்த்திக் காண்பிப்பது நாடகம். சினிமாவின் தன்மையே வேறு. தமிழ் நாட்டில் சினிமா வளராததற்கு ஒரு முக்கிய காரணம் அது நாடகத்திற்கு அடிமைப்பட்டு இருப்பதுதான். இதற்கு வரலாற்று ரீதியான காரணங்களும் உள்ளன. பேசும் படத்தின் ஆரம்பகட்டத்தைப் பார்ப்போம். அன்று 1930களில் பிரபலமாக இருந்த புராண நாடகங்களே படமாக்கப்பட்டன. நாடகமேடை மாதிரியே செட்போடப்பட்டு காமிராவை முன்னால் வைத்து நாடகம் நடிக்கப்பட்டு நாடகம் பார்ப்போரின் கோணத்திலிருந்து அது படமாக்கப்பட்டது. சென்னையில் இருந்த நாடகக் கம்பனிகள் கூட்டங் கூட்டமாக கல்கத்தாவுக்கும் பம்பாய்க்கும் சென்று தங்கள் நாடகங்களைப் படமாக்கிக் கொண்டன. அண்மைக்காலம் வரை இயக்குனர்கள், நடிகர்கள், வசன கர்த்தாக்கள், பாடலாசிரியர்கள் யாவரும் நாடகத்துறையிலிருந்து வந்தவர்கள். நாடகத்தின் இந்த உடும்புப் பிடியிலிருக்கும் வரை ஆரோக்கியமான சினிமா வளர வழியில்லாமல் போயிற்று.

08. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக.)

நினைவுகளுக்கு எட்டாத காலமுதற் கொண்டே தமிழர்கள் அறபிகளுடன் வர்த்தக கலாசார உறவு கொண்டிருந்தனர். கிரேக்கர்கள், ரோமர்கள், சீனர்கள், எகிப்தியர்கள் ஆகியோர் தமிழகத்தில் தங்கள் வர்த்தக நிலையங்களை நிறுவியிருந்தனர். ஏற்றுமதி, இறக்குமதி வாணிபம் மிகப் பெருமளவில் நடைபெற்று நறுமணம் கமழும் பொருட்கள், வண்ண வண்ண கைத்திறன் மிக்க புடவைகள் முத்துக்கள், பவளங்கள் மற்றும் பற்பல பொருட்கள் செங்கடல் துறைகளுக்கும் அங்கிருந்த அலெக்ஸாந்திரியா, கெய்ரோ மற்றும் ஐரோப்பிய துறைமுகப் பட்டினங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டன. ரோமாபுரிச் சீமாட்டிகள் தமிழகத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 'மஸ்லின்' துணியையே வழக்கமாக அணிந்து வந்தனர். பட்டினப்பாலை, பத்துப்பாட்டு ஆகிய நூல்களில் இது பற்றிய தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

கி.மு 1000ஆவது ஆண்டில் சாலமன் மன்னனுக்கு தமிழ் வேந்தன் மயில், குரங்கு, சந்தனக்கட்டை ஆகியவைகளை அன்பளிப்பாக அனுப்பி வைத்துள்ளான். மாமன்னன் அகஸ்தஸ் காலத்தில் தமிழகத்திற்கும் ரோமுக்குமிடையே ராஜரீக உறவுகள் இருந்து வந்துள்ளன. கிரேக்கர்களையும் ரோமர்களையும் தமிழகத்தில் யவனர்கள் என்று அழைத்து வந்தனர். பிற்காலத்தில் அறேபியர்களும் இதே பெயராலேயே அழைக்கப்பட்டனர். நச்சினார்க்கினியர் யவனர்கள் சோனகர் என்று வியாக்கியானம் செய்துள்ளார்.

09. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 30 - 35 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக.)

உலக வாழ்விற்கு மிகமிக இன்றியமையாதது விஞ்ஞானம் என்னும் அறிவுக்கலை, உடற்கூறு, உடலோம்பு முறை, பூத பௌதிகம், மின்சாரம். நம்மைச் சூழ்ந்துள்ள செடி, கொடி, பறவை, விலங்கு முதலியவற்றினியல், கோளியக்கம், கணிதம், அகத்திணை முதலியன வாழ்விற்கு டாமா? இந்நாளில் இவற்றைப் பற்றிய பொது அறிவாதல் பெற்றே தீரல் வேண்டும். இவ்வறிவுக் குறைவால் நாடு மிக இழிந்த நிலையுற்றிருக்கிறது. இவ்விழிநிலையைப் போக்க வேண்டியது உங்கள் கடமை. புறவுலக ஆராய்ச்சிக்கு விஞ்ஞானம் கொழுகொம்பு போன்றது. நம் முன்னோர் கண்ட பல உண்மைகள் விஞ்ஞான அரணின்று இந்நாளில் உறுதி பெறல் அரிது. இக்கால உலகத்தோடு உறவு கொள்ளுதற்கும் விஞ்ஞானம் தேவை. ஆதலின், விஞ்ஞானம் என்னும் அறிவுக்கலை இளைஞருலகில் பரவல் வேண்டும்.

10. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 30 - 35 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக.)

புதிதாகப் பழகும் போது பெரும்பாலோர் நன்றாகப் பழக முடியும். அதில் ஒன்றும் சிறப்பு இல்லை, திறமை இல்லை. புதிய மாணவர் ஒழுங்காக நடந்து கொள்வர். புதிய ஆசிரியர் பாடுபட்டுக் கற்றுக் கொடுப்பார். புதிய வியாபாரம் நல்ல சரக்கு விற்பார். புதிய வேலைக்காரி நன்றாக உழைப்பாள். புதிய பால்காரன் நல்ல பால் தருவான். புதிய நட்பும் இனிமையாக விளங்கும். அதில் ஒரு சிறப்பும் இல்லை.

இந்தப் புதுமையை - எள்ளி நகையாடுவது போல் ஆங்கிலத்தில் ஒரு பழமொழி இருப்பது உனக்கு நன்கு தெரியும். 'புதிய துடைப்பம் நன்றாகப் பெருக்கும்' என்னும் அந்தப் பழமொழி வேடிக்கையாக இருந்தாலும் கருத்து உடையதுதான். அதற்கு மாறாக, எவ்வளவு பழைமை ஆனபோதிலும் சிறப்புக் குன்றாமல் ஒளிவிடும் வாழ்க்கைதான் நல்ல வாழ்க்கை. மற்றையது பொன் முலாம் பூசிய பொருளை போல் தொடக்கத்தில் மட்டுமே நல்ல ஒளி வீசுகின்றது. உண்மையான பொன்னால் செய்யப்பட்ட பொருள் ஒரு நாளும் அப்படி ஆகாது அல்லவா? பழகப் பழக, தேயத் தேய அது குன்றா ஒளி வீசும் அல்லவா? அது போல் வாழும் வாழ்க்கை நல்லவர்களின் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

11. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக.)

இளங்கோ எழுதிய கண்ணகியின் காவியத்தைப் படி, பலமுறை படி, என்றும் படி. கியூரி அம்மையாரின் வரலாற்றையும் கஸ்தூரிபா காந்தியின் வரலாற்றையும் திரும்பத் திரும்பப் படி. இவை போன்றவற்றை மேன்மேலும் படித்துக் கொண்டிரு.

நல்லவர் நட்பு வளர்பிறை போல வளரும் என்கிறார் திருவள்ளுவர். உங்கள் அன்பா இல்வாழ்க்கை வளர்பிறைபோல் வளர வேண்டும் என்று விரும்புகிறேன். அது என் வாழ்த்துதலில் இல்லை நீங்கள் வாழும் முறையில் இருக்கிறது.

நட்புக்காக பெரியோர் சொன்ன அத்தனையும் கணவன் மனைவி வாழ்க்கைக்கும் பொருந்தும் நாலடியாரில் ஒரு பாட்டுப் படித்திருக்கிறேன். அதில் தக்காரின் நட்பு ஒரு கரும்பைக் குருத்திலிருந்து அடிவரையில் தின்றாற் போன்றது என்று கூறப்பட்டிருக்கிறது. அதாவது வரவா இனிமை மிகுந்து கொண்டு போகுமாம். ஆனால் தகாதவரின் நட்பு நேர்மாறாக இனிமை குறைந்து கொண்டு போகுமாம். முதலில் அடிக்கரும்பைக் கடித்துத் தின்று குருத்து வரையில் தின்பது போன்றதாம். காரணம் என்ன? அவரவர் பண்புதான். அது போல நீங்கள் நல்ல பண்புடையவர்களாக விளங்கினால்,

கோலெடுத்து ஊன்றும் கிழவனும் கிழவியுமாக முதுமையுற்ற காலத்திலும் உங்கள் அன்பின் சிறப்பு வளர்ந்து கொண்டே போகும். ஆகவே நல்ல பண்பை வளர்ப்பதுதான் வளர்ந்துள்ள நல்ல பண்பைக் காப்பதுதான் - உங்கள் கடமை என்பதை நன்றாக உணர்ந்து கொள்.

12. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக.)

சிதம்பரனார் கோவைச் சிறைக்கோட்டத்தில் இருந்த காலத்தில் அன்னாருக்கு ஆர்வம் நிறைந்த துணைவராகவிருந்து உதவி புரிந்த உத்தமர். வழக்கறிஞரான திருவாளர் சி. கே. சிவசுப்பிரமணிய முதலியார் என்னும் சிறந்த தமிழ் அறிஞராவர். பல வகையாலும் தமிழுக்கு அரிய தொண்டாற்றி வரும் அன்னாரின் பெயரைத் தமது மூன்றாவது குமாரனுக்குச் சூட்டித் தமது நன்றியைச் செலுத்துவாராயினர். என் இளைஞர் பரலி சு. நெல்லையப்பர், சிதம்பரனார் கோவை சிறையில் தவங்கிடந்த காலத்தில் அங்கு சென்று கோவை வழக்கறிஞர் ஆதரவு கொண்டு சிதம்பரனாருக்கு உதவி புரிந்தும் அவர் வேண்டுகோட்படி சிதம்பரனார் தமது வாழ்க்கை வரலாற்றை அகவலாகப்பாடி, நெல்லையப்பருக்கு அளித்ததையும் இங்கு குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.

சிறந்த வழக்கறிஞராக இருந்த சிதம்பரனார், சிறைக்கோட்டம் சென்று திரும்பியபின் அக்காலத்திய அரசியல் சட்டம், சிதம்பரனாரை மீண்டும் வழக்கறிஞர் பதவியை வகிப்பதற்கு ஒரு முட்டுக்கட்டையாக இருந்தது. சிதம்பரனார் மீண்டும் வழக்கறிஞர் பதவியை அளிக்குமாறு அரசாங்கத்தாரிடம் அனுமதி கோரியபோது உதவி செய்தவர்களில் ஒருவர் சென்னை உயர்தர மன்றத்து நீதிபதியாயிருந்த இ.எச்.வாலஸ் எம்.ஏ.ஐ.எஸ். ஆவர். அன்னாரது பெயரைத் தன் கடைசி மைந்தனுக்கு வாலீஸ்வரன் என்னும் பெயரால் வழங்கி தமது நன்றியைச் செலுத்தினார். இந்த வாலஸ்துரை மகனார்தான் தூத்துக்குடியில் கூட்டு நீதிபதியாயிருந்து நீதி செலுத்தியவர். அவரது கோர்ட்டிலுள்ள கிரிமினல் வழக்குகளில் சிதம்பரனார் எதிரிப்பக்கம் வக்கீலாகத் தோன்றி வாது செய்து வழக்கறிஞர் பதவியில் வல்லுநர் எனப் பெயர் பெற்றார்.

13. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 25 - 30 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக.)

நம் நாட்டின் மிகப்பெரும் தொழில்நுட்ப, தொழில்துறை சாதனைகள் இளம் பெண்கள், ஆடவர்களால் நிகழ்ந்துள்ளன. இச்சாதனைகளை நிகழ்த்தியவர்கள் சாதாரணப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயின்றவர்கள். இந்தியப் பூர்விகம் கொண்ட பல இலட்சம் இளைய தலைமுறையினர் பல்வேறு நாடுகளில் தங்கி பணிபுரிகின்றனர். அவர்கள், இந்தியத் தொழில்நுட்பப் பயிலகங்களிலோ, பெருமைமிக்க நிறுவனங்களிலோ கற்றவர்கள் அல்லர். இந்தியாவின் சாதாரண நிறுவனங்களில் இருந்து வந்தவர்கள். அவர்கள் மருத்துவர், பொறியியலாளர், தொழில்நுட்ப வல்லுநர், தாதியர், ஓவியர், எழுத்தாளர், இதழாளர், கணக்காளர், ஆசிரியர் மற்றும் பல்வேறு பதவிகள் வகிப்பவரும் பிற ஊழியர்களும் அடங்குவர். இந்தியக் கணிப்பொறி மென்பொருள் அற்புதம் நிகழ்த்தியவர்கள் அவர்கள் எளிதாக ஆங்கிலம் பேசும் வலியற்றவராகவும் இருக்கலாம். உலக வாணிகத்தில் உயர்ந்து நிற்கப் போதியளவு கணிப்பொறி இயங்கும் கையேட்டைப் படித்து நிபுணத்துவம் பெற்றவர்கள் என்று அப்துல்கலாம் பெருமிதம் அடைகிறார்.

14. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 35 - 40 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக.)

தமிழர் தமது மொழியை மிக அருமையாகப் போற்றி வளர்த்தனர். தமிழை அரசர் ஆதரித்தனர், வள்ளல்கள் வழிவழியாகப் புரந்தனர். தமிழரசர்களில் பாண்டிய சோழ சோழர்கள்

பழமையானவர். இம் மூவருள்ளும் பாண்டிய மன்னர்கள் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தார்கள். முதன்முதலாகத் தோன்றிய சங்கம் தலைச்சங்கம் எனப்படும். இச் சங்கம் இப்பொழுது கன்னியா குமரிக்குத் தெற்கே கடலால் மூடப்பட்டுக் கிடக்கும் குமரிகண்டத்திலிருந்த தென்மதுரை என்னும் நகரில் தோற்றுவிக்கப்பட்டது.

தலைச் சங்கத் தலைவர் சிவபெருமானும், முருகவேளும், அகத்தியனாரும் என்பர். இச்சங்கம் நாலாயிரத்து நானூற்று நாற்பதாண்டு நடைபெற்றது. கடல் கோளால் இது முடிவடைந்தது. இடைச்சங்கம் கபாடபுரத்தில் தோன்றியது தலைமைப் புலவர் அகத்தியனார் என்பர். இச்சங்கம் மூவாயிரத்தெழு நூறாண்டு நடைபெற்றது. இதுவும் கடலால் அழிய, இப்பொழுதுள்ள மதுரையில் மூன்று சங்கம் கடைச்சங்கம் நிறுவப்பட்டது. இதில் நக்கீரர் தலைமைப் புலவராக இருந்தார். இ.ஃ.து ஆயிரத்து எண்ணூற்றைம்பதாண்டு நடைபெற்றது. இவ்வாறு பல்லாயிரதாண்டாகத் தமிழனது சங்கப் புலவர்களால் அமிழ்தம் போல பாதுகாக்கப்பட்டு வரலாயிற்று. ஔவையார் 'சங்கத் தமிழ்' என்றதும் இக்கருத்துப் பற்றியேயாம்.

15. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக.)

கல்வி எல்லோர்க்கும் இன்றியமையாதது பண்டை காலத்தில் ஆண்களைப் போலவே பெண்களும் கற்றுக் வல்லவர்களாயும் அறிஞர்களால் மதிக்கப்பட்டவர்களாயும் இருந்தனர். தன் கடமையை உணரவும் தன்னை மேனிலைப்படுத்தவும் ஆணுக்குக் கல்வியானது எத்துணை உதவியாயுள்ளதோ பெண்ணுக்கும் அத்துணை உதவியாயுள்ளது. 'கோசல நாட்டுப் பெண்கள் கல்வியும் செல்வமும் உடையவராயிருந்தமையால் வீடுகள் தோறும் விருந்தும் ஈகையும் சிறந்து விளங்கின' எனக் கம்பர் கூறுகிறார். ஆனால் இக்காட்சி தமிழ் நாட்டில் நிலைத்திருக்கவில்லை.

பெண்கள் அடிமைகள் என்றும், இல்லில் அடங்கியிருப்பவர்கள் என்றும் கருதுங் காலம் வந்துவிட்டது. பெண்ணுக்கு கல்வி தவிர்க்கப்பட்டது. அ.ஃ.து ஆண்களுடைய பிறப்புரிமையாகிவிட்டது. பெண்கள் கணவனுக்கு மந்திரி போல இருக்க வேண்டும் என்றார்கள், பெண்கள் இல்லறத்தை நல்லறமாக்க வேண்டும் என விதித்தார்கள், பெண்களே கணவனுடன் புகழை உயர்த்துபவர்கள் எனவும் புனைந்தார்கள். ஆனால் அவர்களே அறிவை தடைப்படுத்தியும் விட்டார்கள்! அறிவு வளர்ச்சிக்கு முற்றுப்புள்ளியும் வைத்துவிட்டார்கள் அறிவில்லா நங்கை ஆண்மகனுக்குப் புத்தி கூற அறியாள் என அறிந்தாரில்லை! கல்லாத மங்கை கடமையை நன்கு உணராள் என உணர்ந்தாரல்லர்! அம்மட்டோ! கணவனிறந்த பின்பு கையற்றுக் கலங்கும் காரிகை கல்வியறிவில்லாதவளாய் எவ்வாறு தன் வாழ்க்கையை நடத்துவாள் எனவும் ஓர்ந்திலர்.

அன்பென்று கொட்டு முரசே!